VASANTHAM Tamil Monthly | 6 - 8 | டிஸம்பர் 2012 DECEMBER 2012
مجلة الربيع ملحق مجلة البشرى باللغة التاميلية

# வசந்தம்

வாசிக்க மட்டுமல்ல.., வாழ்க்கைக்கும்..!

The Spring | மாத இதழ்




# ஊ தித் திரிக்கும்
# டகத் துறைகள்..!






## பதின்பருவ பிள்ளைகளால் அவஸ்தையா..?



## மாமியாரா..? மருமகளா..??

جمعية النجاة الخيرية

IPC
لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE

VASANTHAM - December 2012.indd 1 12/30/12 9:59:37 AM

# தகாத உறவு..!
# வேண்டாத வரவு..!!

எ
ய்
ட்
ஸ்

சபலத்தின் சம்பளம்..!சலனத்தின் சாபம்...!!

நொடிகளில் மகிழ்வு..! யுகங்களில் இழப்பு..!!

உயிரை உருக்கும்..! உடலைக் கெடுக்கும்..!!



டிஸம்பர் 1
எய்ட்ஸ்
தினம்

VASANTHAM - December 2012.indd 2 12/30/12 9:59:43 AM

# இந்த இதழில்..!




வசந்தம்
வாசிக்க மட்டுமல்ல.. வாழ்க்கைக்கும்..!

VASANTHAM
TAMIL MONTHLY
DECEMBER 2012
டிஸம்பர் 2012
மலர் 6 இதழ் 8



CHIEF PATRON
தலைமைப் புரவலர்
Mohd. Ismail Al-Ansari
முஹம்மத் இஸ்மாயீல் அல்-அன்ஸாரி

GENERAL SUPERVISOR
பொது மேற்பார்வையாளர்
Khalid-al-Sabea
காலித் அல்-ஸபா

EDITOR
ஆசிரியர்
M.A.Abdul Musavir
மு.அ. அப்துல் முஸவ்விர்

EDITORIAL BOARD
குழுமம்
IPC Tamil Section
இஸ்லாமிய நிலையம் தமிழ்ப் பிரிவு

INITIAL LAY-OUT
முதன்மை வடிவமைப்பு
Aboo Madeeha
அபூ மதீஹா

DESIGN
வண்ண உருவரைபடம்

مؤسسة زخرف للدعاية والإعلان
Zukhruf Advertising Agency



PUBLISHER n t s a L

لجنة التعريف بالإسلام
ISLAM PRESENTATION COMMITTEE
جمعية النجاة الخيرية



CONTACTS தொடர்புக்கு
P.O. BOX: 1613 SAFAT 13017
STATE OF KUWAIT
Editor's Desk
22447526, 22444117 | Extn: 208
Mob 97848068 -97266683 (Hotline)
FAX: 22400057
Attn: IPC—VASANTHAM
musawir@alnajat.com.kw
vasanthammonthly@yahoo.com

WEBSITE வலைதளங்கள்
ipc.org.kw
vasanthamtamil.com

SOCIAL WEBSITES
சமூக வலைதளங்கள்
facebook/vasanthamtamil
www.twitter/vasantham2k
YouTube Scribd.





## ஊதித் திரிக்கும் ஊடகத் துறைகள்..!

முகப்புக் கட்டுரை

மாலிக் கான்

04

நவீன ஊடகங்கள், இன்றைய தொழில்நுட்ப உலகின் அரிய கண்டுபிடிப்புக்கள்..!செய்திகளையும், நிகழ்வுகளையும் தம் பாணியில் வழங்கச் செய்யும் வல்லமை படைத்த விஞ்ஞானங்கள்..!

## சிறுகதை

சுவனப்ரியன்

### மாமியாரா..? மருமகளா..??

12



உறவுகள் தொடர்கதைகள்.! பிரிவுகள் சிறு கதைகள்!! தொடர்கதைகள் தொடரும் கதைகள்..! சிறுகதைகள் முடிந்தே ஆக வேண்டிய பக்கக் கதைகள்..!

## நினைவு

நூல்

### மறக்க முடியுமா..?




பாபரி மஸ்ஜித் ஷஹீத் தின சிறப்பு நினைவுகள்!

14

## கவித்தூறல்கள்

மலிக்கா ஃபாரூக்



### "ஆண்டவன் இல்லை..?"

15

## உடல்நலன்

அவள் விகடன்

தாய்மை இறைமையின் உன்னத அருட்பேறு..! அது மகளிரின் வாழ்வில் வற்றா பரவசம் தரும் ஆறு.!

18



### கர்ப்பகால பொதுநியதிகள்.!

02 வாசகர் சுகந்தங்கள் — வாசக நெஞ்சங்களிடமிருந்து.!
03 எண்ணச் சிந்தனை — ஆசிரியரிடமிருந்து..!
08 பேட்டி — M.H. ஜவாஹிருல்லாஹ்
09 குடும்பம் — பெண்ணே நீ..!
10 IPC வழித்தடங்கள் — அப்துல்லாஹ்
11 ஒழுக்கம் — யாஸர் அரஃபாத்
16 மழலையர் சோலை — சவுந்தர்யம்
17 விருந்தினர் பக்கம் — நாஸியா
19 சுற்றத்து செய்திகள் — அழகிய சிறியவன்
20 அறிவுப் போட்டி-45

بريد الربيع- كلمة العدد - أهمية الاعلان - مقابلة - الاولاد في الاسلام - المراهق والعائلة - حماتي وزوجتي
- انشطة اللجنة - اله واحد (نشيدة) - باب المسجد - صفحة الأطفال - الرجال والنساء -الصحة - أخبار العالم - مسابقة




# “துப்பாக்கி ”கள் வெட்கப்பட வேண்டும்..!

**அஸ்மா**

வசந்தம் நவம்பர் இதழ்..! பாராட்ட வார்த்தைகளே இல்லை..! அவ்வளவும் பொக்கிஷமோ., பொக்கிஷம்!இல்வாழ்க்கை சிறப்பிதழ்.., ஒவ்வொரு இல்லத்தாருக்கும் அவசியமான ஒன்று..!கவித்தூறல் அசத்தியது..!இவற்றின் நடுவே.., தேவையைக் கருதி தரப்பட்ட ஆசிரியர் தலையங்கம் சும்மா 'நச்'-சென்று இருந்தது. படித்தாவது 'துப்பாக்கி”-கள் வெட்கப்பட வேண்டும்..!

**தஞ்சை - தமிழகம்**
**ருமைதியா - குவைத்**

*அன்புள்ள வாசகர்களே! அனைவருடைய பெயர்களையும் இங்கு சேர்க்க பக்கங்கள் போதாததால்.., சிலரை மட்டுமே சேர்த்துள்ளோம்!அடுத்தடுத்த இதழ்களில் தொடருவோம்!தொடர்ந்து வசந்த முகநூல் வாசியுங்கள்!*

*தொடருவோர்..!*

- SunStarSiraj
- malikka.farook
- mohamed.bhuhari
- aahazack1
- tippusultha
- angel.farook

*இன்னும் பலர்..!*

*தொடருவோர்..!*

abdul jabbear 786@ news
Ziavu Deen @ziavu
Tinesh Murugan @TineshM

**T. நியாஸ் அஹமத்**
அபிவிருத்தீஸ்வரம் - தமிழகம்
மங்க.:.ப் - குவைத்

வசந்த கதம்பம் தந்த செய்திகள் மிகவும் உபயோகரமானவை.சுற்றத்து செய்திகளில் போப் கூறியதாக வந்த இஸ்லாத்தைக் குறித்த செய்தி என்னைப் போன்ற தமிழ வாசகர்களுக்கு ஒரு புதிய செய்தி. இப்படிப்பட்ட செய்திகளை வழங்குவதில் வசந்தம் மட்டுமே முந்துகின்றது என்கின்றேன் நான்..!



**முஹம்மத் வைகூல் கருணை**
திருச்சி - தமிழகம்
சால்மியா - குவைத்

இஸ்லாத்தின் வளர்ச்சி குறித்து போப் செய்தி மிகவும் மகிழ்ச்சியைத் தருகின்றது..! “சிந்தித்துப் பார்க்க மாட்டீர்களா?” என்று திருக் குர்ஆன் வினவுவதன் விளைவே இந்த இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவல்கள் எனும்போது மனநிறைவு ஏற்படுகின்றது.

**இராமகிருஷ்ணன்**
சென்னை - தமிழகம்
.:.பர்வானியா - குவைத்

வசந்தம் மிக்க அழகு..! வடிவமைப்பும் சரி,உள்ளடக்கங்களும் சரி..!உள்ளத்தையும் சிந்தனையையும் ஒருங்கே கொள்ளை கொள்கின்றன.முஸ்லிம் அல்லாதவனாக இருந்தபோதிலும், 'துப்பாக்கி' சிந்தனையில் எனக்கும் உடன்பாடில்லை. ஆசிரியர் தலையங்கம் 'துப்பாக்கி' முருகதாஸ் போன்ற சிந்தனை வணிகர்களுக்கு சரியான புல்லட் குண்டு..!




**முஹம்மத் ஸூமைல்**
காத்தான்குடி - இலங்கை
ஜாப்ரியா - குவைத்

குர்பானீ குறித்த கட்டுரை மிக அழகிய விளக்கம்..!மிகத் தெளிவாக விளங்க முடிந்தது.சுற்றத்து செய்திகள் பல நல்ல விஷயங்களைத் தருகின்றன.விருந்தினர் பக்கம் நல்ல பல கருத்துக்கள் தருவோரை எமக்கு அறிமுகப்படுத்துகின்றது



தமிழ் வசந்தம் வளர வாழ்த்துகின்றேன்.!



http://www.facebook.com/ ahamedsameed
**அஹ்மத் ஸமீத் கல்முனை இலங்கை**



அன்பு வாசகர்களே.., படைப்பாளர்களே..! உங்கள் படைப்புக்களை அனுப்பும்போது குறைந்தபட்சம், மின்னஞ்சல் முகவரி,செல்லிடைப்பேசி எண் ஆகியவற்றை அவசியம் குறிப்பிடுங்கள்..!படைப்புகள் அனைத்தையும் சுருக்க,திருத்த ஆசிரியருக்கு உரிமை உண்டு..!




# இப்பொழுதாவது அறிந்து கொள்ளுங்கள்..!

மதித்து நடக்க வேண்டிய மங்கையரை நசுக்கிப் பிழியும் நாசகார மிருகங்கள்..! போகப் பொருளாய் மட்டுமே அவர்களைக் கண்டு ஊளையிடும் ஓநாய்கள்..! உன்னத பெண்மையை ஊனமாக்கி தம் இச்சை தீர்க்கும் காட்டுப் பன்றிகள்..!இவர்களை ஒன்றும் செய்ய இயலாது மனித சட்டங்கள்..!நிரந்தர தீர்வுக்கு தேவை இறைச்சட்டங்கள்..! அதைத்தான் நாடுகின்றார்கள் இன்றைய நியாயவான்கள்..!

கீழே கூறப்போகும் சம்பவங்கள் போன்று பல இருப்பினும் ஒரு சம்பவம் மட்டுமே நாட்டை உலுக்கிக் கொண்டிருக்கின்றது. ஓடும் பேருந்தில், காமுகர்கள் நால்வர், மருத்துவ மாணவி ஒருவரை பலாத்காரப்படுத்தி பேருந்திலிருந்து தூக்கி வீசியிருக்கின்றார்கள். உணவு மண்டலம், சிறுநீர்க் குழாய் என்று உடலின் முக்கிய பாகங்களுடன் தொடர்புடைய உறுப்புக்கள் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் மிகக் கவலைக்கிடமாக இருக்கின்றார் அந்த 23 வயது இளம்பெண்..,இந்த தலையங்கம் எழுதப்படும் வரை..!

தலைநகரில் நடந்த சம்பவம் என்பதால் உடனே வெளிச்சத்துக்கு வந்த விஷயம் இந்திய நாடாளுமன்றத்தையே ஸ்தம்பிக்ச் செய்யும் அளவுக்கு இந்தியர்களை உசுப்பிவிட்டடிருக்கின்றது.

அவர்களைத் தூக்கிலிடுங்கள்..!
நடு சாலையில் நிற்க வைத்து நாய் போல சுடுங்கள்..!
அவர்களின் வெட்கத்தல உறுப்பை அறுத்தெறியுங்கள்..!

என்று அனைவரும் பல தீர்ப்புக்களை சொல்லியிருக்கின்றார்கள்.

இவற்றில் எதனை செயற்படுத்துவது. மரண தண்டனைக்கு எதிரானவர்கள் என்ன சொல்வார்கள்..?

உலகியல் நடைமுறையில் குற்றங்களுக்கான தண்டனை நாட்டுக்கு நாடு வேறுபட்டு நிற்கின்றது. ஒரு நாட்டில் குற்றமாகக் கருதப்படும் செயல் இன்னொரு நாட்டில் அனுமதிக்கப்படுகஜன'றது. உதாரணத்துக்கு, ஓரினச் சேர்க்கை, மது, விபச்சாரம் என்று பட்டியலிட்டுக் கொண்டே செல்லலாம்.

ஆனால், இது தொடர்பான குற்றங்களுக்கு என்ன சட்டங்களை அவை வைத்திருக்கின்றன அல்லது நடைமுறை-களைக் கொண்டிருக்கின்றன என்று கண்டால், அந்தந்த ஆட்சியாளர்களிடம் பதில் காணோம். அப்படியே தீர்வு என்று கருதி, குற்றங்களுக்கு வேறு வடிவில் அனுமதி தந்துவிடுகின்றார்கள். அதனால், குற்றவாளிகளுக்கு இன்னும் தைரியம் பிறக்கின்றது.., அல்லது இருப்பவர்களும் இந்த சீரழிவில் தம்மை விழச் செய்துகொள்கின்றார்கள்.

ஆனால், பாரம்பர்ய சிறப்புக்கள் இன்னும் மீதமிருக்கும் இந்தியா போன்ற நாடுகளில், குற்றங்களிலிருந்து தப்பிக்க சட்ட ஓட்டைகள் இருப்பினும், மக்கள் மனங்களில் அவற்றுக்கெதிரான மனபபாங்கு ஆழ ஊன்றியிருப்பது மறுக்க முடியாது. ஆனால், மனிதனே வடிவமைத்துக் கொண்ட சட்டங்கள் மூலம் உலகளாவிய ஒரு பொதுவான தீர்ப்பை நியாயத்தை வழங்கிட முடியுமா..?

அமெரிக்காவில் ஒரு பெண் பலாத்காரப்படுத்தப்படும் அதே வகையில்தான் இந்தியாவிலோ அல்லது ஆப்பிரிக்காவிலோ பாதிக்கப்படுகின்றாள். குற்றத்தின் செயல்வடிவம் வேறு வகையில் இருப்பினும், அமெரிக்கப் பெண்ணுக்கு இருக்கின்ற அதே கற்புதானே இந்தியப் பெண்ணுக்கும். எனவே, இருவருக்கும் ஒரே நீதிதானே கிடைக்க வேண்டும்..!

ஆனால், நாடுகளுக்கு வேறுபட்ட சட்டங்களால், குறிப்பாக இதுபோன்ற குற்றவியல் சட்டங்களால், பாரபட்சமற்ற, தாமதமற்ற நீதி கிடைத்துவிடுகின்றதா என்ன..?


பாருங்கள்..! கொலை, பலாத்காரம், திருட்டு, சூது, மது என்று உலகம் குற்றங்களாகக் கருதும் விஷயங்களில் இறை மார்க்கமாம் இஸ்லாம் சர்வதேச அளவில் பொருந்தக்கூடிய, மனிதகுலத்துக்கு நலன் விளைவிக்கக்கூடிய வகையிலான சட்டங்களையே முன்வைக்கின்றது.

இஸ்லாத்துக்கு என்றுமே விமர்சனதாரர்களாக மட்டுமே இருந்து வரும் சங்கப் பரிவாரங்கள்கூட இந்த விவகாரத்தில் இஸ்லாம் வலியுறுத்தும் சட்டத்தையே வேறு விதத்தில் கூறியிருக்கின்றார்கள். ஏழு வருடங்கள் வரை மட்டுமே அதிகபட்ச தண்டனையாக பாலியல் பலாத்கார குற்றத்துக்கு தண்டனை தரும் இந்திய குற்றவியல் சட்டம் நம் நாட்டில் மட்டுமல்ல உலகளாவிய அளவில் மறுபரிசீலனை செய்ய வேண்டிய நேரம் இது..!

ஆம்..! எல்லோரும் ஒப்புக் கொள்கின்றார்கள் கடுந்தண்டனை தேவை குற்றவாளிகளுக்கு என்று..! ஆனால், அதே கருத்தை பன்னூறாண்டுகளாக இஸ்லாம் வலியுறுத்துவதால் மட்டுமே பழமைவாதம், மனிதஉரிமை என்று கொக்கரிக்கின்றார்கள்..!ஆனால், இறைவேதம் கூறுகின்றது:-

நீங்கள் மக்களிடையே தீர்ப்பு வழங்கினால் நீதத்துடன் தீர்ப்பு வழங்குங்கள். திண்ணமாக, அல்லாஹ் உங்களுக்கு வழங்குகின்ற அறிவுரை மிக உன்னதமானதாகும். திண்ணமாக, அல்லாஹ் அனைத்தையும் செவியுறுபவ-னாகவும் உற்று நோக்குபவனாகவும் இருக்கின்றான். திருக் குர்ஆன் 4:58

இனி, எப்படிப்பட்ட நீதி அவசியம் என்பதை உலகம் அடையாளம் கண்டால், நிச்சயம் அது இஸ்லாமிய இறைச்சட்டங்களில் இருப்பதை காணும் என்பதில் ஐயத்திற்கிடமில்லை..!



மு.அ.அப்துல் முஸவ்விர்
ஆசிரியர்
musawir@alnajat.com.kw | musavir2010@yahoo.com | maam2k@gmail.com
http://www.facebook.com/vasanthammonthly | https://twitter.com/Vasantham2k
ipcblogger.net/musawir/தேன் சிந்தனைகள்

VASANTHAM - December 2012.indd 3 12/30/12 9:59:57 AM

● முகப்புக் கட்டுரை | *மாலிக் கான்*

# ஊதித் திரிக்கும் ஊடகத் துறைகள்..!



**நவீன ஊடகங்கள், இன்றைய தொழில்நுட்ப உலகின் அரிய கண்டுபிடிப்புக்கள்..!செய்திகளையும், நிகழ்வுகளையும் தம் பாணியில் வழங்கச் செய்யும் வல்லமை படைத்த விஞ்ஞானங்கள்..! இங்கு உண்டு, உண்மையான செயல்முறையில் பயிலக்கூடிய அழகிய ஊடகப் பறவைகள்..!மற்றவையும் உண்டு,இல்லாததையும் பொல்லாததையும் திரித்துக்கூறக்கூடிய வல்லூறுகள்..! ஆனால், சத்தியம் வெல்லும் என்பதே உலக ஊடகத்துறைகள் கண்ட உண்மைகள்..!**



VASANTHAM - December 2012.indd 4 12/30/12 10:00:01 AM

விஞ்ஞானம், அறிவியல், மருத்துவம் எனப் பல துறைகளிலும் மனிதன் உச்சத்தை அடைந்து கொண்டே செல்கின்றான். இதில் குறிப்பாகக் கூற வேண்டுமெனில் மீடியா எனும் ஊடகத்துறை உலகில் அதிவேகமாகப் பரவியும் முன்னேறிக்கொண்டும் இருக்கின்றது. உலகளாவிய (Mass-Media) ஊடகங்களில் முஸ்லிம் சமுதாயமும், இஸ்லாமும் குறிவைத்து அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றது.

இது போன்ற சூழலில்

**முஸ்லிம் சமுதாய மக்களுக்கு**

**மீடியா-ஊடகத்துறை என்றால் என்ன?**

**அதன் அவசியம் என்ன?**

**அதில் முஸ்லிம்களின் நிலை என்ன?**

**மீடியாவில் எவ்வாறு நாம் தாக்கத்தை ஏற்படுத்தலாம்?**

என்று எடுத்துரைத்து துயில் கொண்டிருக்கும் சமுதாயத்தை விழிப்படையச் செய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

## மீடியா? ஊடகத்துறை

உலகத்தில் பரந்து இருக்கும் இதழியல்கள், தொலைக்காட்சி சேனல்கள், திரைப்படம், வீடியோ கான்ஃபிரன்சிங், இணையம், தனிநபர் பிரச்சாரம், வானொலி மற்றும் அலைவரிசைகள் (தற்போது சமூக வலைதளங்கள்) எனப் பெருவாரியான மக்களைச் சென்றடையும் செய்திகள் மற்றும் இதற்குப் பயன்படும் தகவல் தொடர்புக் கருவிகள், ஜனசக்தி ஆகிய அனைத்தும் ஊடகம் (Media) என்ற கருத்தாக்கத்தில் அடக்கிவிடலாம்.

ஊடகங்களில் முஸ்லிம்கள் எவ்வாறெல்லாம் பாதிப்புக்குள்ளாக்கப்படுகிறார்கள், இஸ்லாம் எவ்வாறெல்லாம் தவறாகச் சித்தரிக்கப்படுகின்றது என்பதைச் சொல்லி மாளாது. மீடியாவில் இவ்வாறான தீயசக்திகளை அறிந்து ஈடுகட்ட வேண்டிய நிர்பந்தத்தில்தான் முஸ்லிம்கள் இருந்து கொண்டிருக்கின்றார்கள்.

## மீடியா-ஊடகங்களின் அவசியம்?

மீடியா- ஊடகத்துறை ஒரு நாட்டின் அல்லது சமுதாயத்தின் நிறை, குறைகளை உலக மக்களின் கவனத்திற்குக் கொண்டு செல்கிறது. அதன் மூலம் அந்த நாட்டின் வளர்ச்சிக்கும், சமுதாயத்தின் வளர்ச்சிக்கும் வித்திட முடிகிறது. சில சம்பவங்களை எடுத்து அலசி, ஆராய்ந்துப் பார்த்தோமானால் மீடியாவின் அவசியம் என்ன என்பதை அனுமானித்துவிடலாம்.

பாலஸ்தீனிய முஸ்லிம்கள் தங்கள் சொந்த மண்ணில் இஸ்ரேலிய யூத மக்களால் விரட்டியடிக்கப்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இஸ்ரேல் என்ற இல்லாத ஒரு நாட்டை யூதர்கள் திட்டமிட்டு பாலஸ்தீனில் உருவாக்கி விட்டார்கள். இவ்விஷயத்திலும் ஊடகங்கள் முஸ்லிம்களுக்கு எதிராக இன்றளவும் செயல்பட்டு வருகின்றன. வரலாறு நெடுகிலும் முஸ்லிம்களுக்கு எதிராக இவ்வாறான போர்கள் அரங்கேறியே வருகின்றன.

குஜராத் கலவரத்தை எடுத்துக் கொள்ளுங்கள், மோடி அரசின்போது இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட முஸ்லிம்கள் கொடுமையான முறையில் கொலை செய்யப்பட்டனர். நூற்றுக்கணக்கான முஸ்லிம் பெண்கள் கற்பழிக்கப்பட்டார்கள், முஸ்லிம்களின் சொத்துக்கள் மதவெறி பிடித்தவர்களால் சூறையாடப்பட்டன.

குஜராத் கலவரத்தில் முஸ்லிம்கள் அநியாயமான முறையில் தடாக் கைதிகளாகவும், பொடாக் கைதிகளாகவும் கைது செய்யப்பட்டு விசாரணை மரபு மீறலையும் தாண்டி மயக்கமருந்து கொடுத்து நினைவிழக்கச் செய்தனர். விசாரணை என்ற பெயரில் சித்தரவதை செய்யப்பட்டனர். இச்செய்திகளை

**குஜராத் கலவரத்தில் முஸ்லிம்கள் அநியாய-மான முறையில் தடாக் கைதிகளாகவும், பொடாக் கைதிகளாகவும் கைது செய்யப்பட்டு விசார-ணை மரபு மீறலையும் தாண்டி மயக்கமருந்து கொடுத்து நினைவிழக்கச் செய்தனர். விசாரணை என்ற பெயரில் சித்தரவதை செய்யப்பட்டனர். இச்செய்திகளை மீடியாக்கள் வெளியுலகத்திற்குக் கொண்டுவந்த போது உலகநாடுகள் குஜராத் சம்பவத்தை விமர்சித்தன.**






**மக்கள் தொடர்பு கருவிகளான வானொலி, தொலைக்காட்சி,திரைப்படங்கள் மற்றும் பத்திரிக்கை ஊடகங்களில் வகுப்பு வெறி ஊடுறுவிவிட்டது.**

மீடியாக்கள் வெளியுலகத்திற்குக் கொண்டுவந்த போது உலகநாடுகள் குஜராத் சம்பவத்தை விமர்சித்தன. இந்தியாவிற்கு ஏற்பட்ட தலைகுனிவு குஜராத் சம்பவம் என எல்லோரும் கூறினர்.

அப்போதைய பிரதமர் வாஜ்பாய் எந்த முகம் கொண்டு இனி நான் வெளிநாட்டுப் பயணங்கள் மேற்கொள்வேன் என்று கூறினார். மீடியாவின் மூலமாக இச்சம்பவங்கள் வெளிவராமலிருப்பின் இன்னும் முஸ்லிம் சமுதாயம் நசுக்கப்பட்டுக் கொண்டே இருக்கும்.

மாற்று மதத்தில் ஒருவன் தவறு செய்தால் அதை அவனளவிலும், முஸ்லிம் ஒருவன் தவறு செய்துவிட்டால் அதை இஸ்லாத்தோடு இணைத்தும் செய்திகளை வெளியிடுவது முஸ்லிம்களுக்கு எதிரான மீடியா-ஊடகங்களுக்கு கைவந்த கலை. முஸ்லிம்கள் என்றால் வன்முறைகளைத் தூண்டுபவர்கள், தீவிரவாதிகள் என்று மாற்றார்கள் கூறும் மனோநிலைக்கு மீடியாக்கள் மக்களை மாற்றியிருக்கின்றன.

முஸ்லிம்களுக்கு எதிரான சூழ்ச்சிகளும், வன்முறைகளும் ஒருபுறம் என்றால் ஊடகங்களின் வாயிலாக இஸ்லாத்தின் மீது நடத்தப்படும் அவதூறான பிரச்சாரங்கள் மற்றொருபுறம். குர்ஆன், ஹதீஸ்களை திரிப்பதும், இஸ்லாமிய ஷரீஅத் சட்டங்கள் நடைமுறைக்கு ஒவ்வாது, இஸ்லாம் பெண்களை அடிமைப்படுத்துகின்றது, பர்தா முஸ்லிம் பெண்களின் முன்னேற்றத்தைத் தடுக்கின்றது என்றெல்லாம் போலிப்பிரச்சாரங்கள் ஊடகங்களின் மூலமாக நடத்தப்படுகின்றன.

நபி (ஸல்) அவர்களின் வாழ்க்கை முறை, திருமணங்கள், போர்கள் ஆகியவைகளை தவறான முறையில் ஊடகங்கள் சித்தரிக்கின்றன. எந்த அளவிற்கு என்று சொன்னால் அவர்களின் சூசகமான கருத்துக்களின் மூலம் பெயரளவில் முஸ்லிம் களாக இருப்பவர்கள் கூட நாத்திகவாதியாக மாறிவிடுமளவிற்கு அவர்களின் மொழிப் புலமை கொண்டும், வாதத் திறன் கொண்டும் இஸ்லாத்திற்கு எதிராகப் போர் தொடுக்கிறார்கள்.

உலக அளவில் முஸ்லிகள் பொட்டுப் பூச்சிகளைப் போல அழிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றார்கள். முஸ்லிம்களின் வரலாறுகள், தியாகங்கள் எல்லாம் திட்டமிட்டு சிதைக்கப்படுகின்றது. பள்ளிகளில் பயில வரும் பிஞ்சுகளின் உள்ளங்களிலும் முஸ் லிம்கள் தீயவர்கள் என்ற நஞ்சை விதைக்கின்றனர். பாடதிட்டங்களில் தங்கள் மதக் கொள்கைகளைத் திணிக்கின்றனர். காவல் துறை, இராணுவம், அரசு நிர்வாகம் இவற்றில் முஸ்லிம்கள் திட்டமிட்டே புறக்கணிக்கப்படுகின்றார்கள்.

மக்கள் தொடர்பு கருவிகளான வானொலி, தொலைக்காட்சி,திரைப்படங்கள் மற்றும் பத்திரிக்கை ஊடகங்களில் வகுப்பு வெறி ஊடுருவிவிட்டது. முஸ்லிம்கள் விரும்பாத தலைமைகளை மீடியாக்கள் மூலம் மக்கள் சக்தியை உருவாக்கி முஸ்லிம்கள்பால் சுமத்துகின்றன. நாம் மீடியாவில் அவசியத்தை உணராமலிருப்பதன் விளைவுதான் இத்தகைய தீய பலன்களை அடைய வேண்டியுள்ளது.

## ஊடகத்துறையில் முஸ்லிம்கள் பின்தங்கியிருப்பதன் காரணங்கள்?

ஒவ்வொரு நவீனக் கண்டுபிடிப்புகள் வந்தபோதெல்லாம் அதைத் தீய வழியில் பலர் பயன்படுத்துவதைக் கண்டு அஞ்சி முற்றிலுமாக அதை ஏற்றுக்கொள்ள மறுத்தனர். இன்றளவும் டி.வி இல்லாத பல இஸ்லாமிய இல்லங்கள் இருக்கத்தான் செய்கின்றன. டி.வி'யை எவ்வாறெல்லாம் நல்ல முறையில் பயன்படுத்தலாம் என்பதை அறிய முற்படாமல் டி.வி பார்ப்பது ஹராம் என்ற மார்க்கத் தீர்ப்பையும் வழங்கினர்.



VASANTHAM - December 2012.indd 6 12/30/12 10:00:02 AM

வீடியோ மற்றும் புகைப்படம் எடுப்பது ஹராம் என்றும் கூறினர். அதை எவ்வாறு சமுதாய வளர்ச்சிக்கும், மார்க்க வளர்ச்சிக்கும் பயன்படுத்தலாம் என்று ஆமை வேகத்தில் அறிந்துகொண்டதன் பின்தான் ஆடியோ, வீடியோ, சி.டி, டி.வி.டி என பயன்படுத்தத் தொடங்கியிருக்கிறார்கள்.

திருக்குர்ஆனையும், நபிகளாரின் அறிவுரைகளும் ஆரம்பகாலத்திலேயே மொழியாக்கம் செய்ய மறந்துவிட்டனர். மாறாக முன்னோர்களின் கட்டுக்கதைகளை கையிலெடுத்துக்கொண்டு இதுதான் மார்க்கம் என்று பிரச்சாரங்கள் செய்ய ஆரம்பித்துவிட்டதால் இஸ்லாம் அதன் தூயவடிவில் பலருக்கு கிடைக்காமல் சென்றுவிட்டது. இவ்வகையான முன்னோர்களின் திரிபு பெற்ற நூல்கள், பிரச்சாரங்கள் மீடியாவில் சரிகட்ட இயலாத பின்னடைவை ஏற்படுத்திவிட்டன.

முஸ்லிம்கள் கல்வியில் ஆர்வம் காட்டாதது, புதிய கண்டுபிடிப்புகளை உடனே ஏற்க மறுத்தது, திருக் குர்ஆன், நபிமொழிகளை தெளிவுபடுத்த மறந்தது,

**மார்க்கம் தொடர்பான அம்சங்களுக்கு கொடுத்து வந்த முக்கியத்துவத் தினூடே,சமுதாய வளர்ச்சிக்கும் கொடுக்காதது, தான் உண்டு தன் வேலையுண்டு என்ற பிற்போக்கு மனப்பான்மை என்று முஸ்லிம்கள் மீடியாவில் பின்தங்கிப்போனதன் காரணங்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம்.**

மார்க்கம் தொடர்பான அம்சங்களுக்கு கொடுத்து வந்த முக்கியத்துவத்தினூடே,சமுதாய வளர்ச்சிக்கும்







கொடுக்காதது, தான் உண்டு தன் வேலையுண்டு என்ற பிற்போக்கு மனப்பான்மை என்று முஸ்லிம்கள் மீடியாவில் பின்தங்கிப்போனதன் காரணங்களை அடுக்கிக்கொண்டே செல்லலாம். பொதுவாக முஸ்லிம்கள் ஊடகங்களில் பின் தங்கியிருப்பது அனைவரும் ஏற்றாக வேண்டிய கூற்று. எனவே இதை விரிவாக அலசுவதை விடுத்து ஊடகங்களில் நாம் எவ்வாறு முன்னேறலாம் என்பதை ஆய்வு செய்வோம்.

## ஊடகத்துறைகளை எவ்வாறு பயன்படுத்தலாம்?

நவீன கண்டுபிடிப்புக்களைத் தொலைநோக்கு பார்வை கொண்டு அங்கீகரிக்கவேண்டும். அதன் மூலம் முஸ்லிம்களுக்கு ஆதரவான மக்கள் சக்தியை உருவாக்க முஸ்லிம்கள் பாடுபடவேண்டும். மீயாக்களில் முஸ்லிம்கள் தாக்கத்தை ஏற்படுத்த பலவழிகள் உள்ளன, அவற்றில் சிலவற்றை மட்டும் இங்கே பட்டியலிட்டுப் பார்ப்போம்.

## கல்வியின் முன்னேற்றம் ஊடகங்களின் வளர்ச்சிக்கு அடிகோலிடும்..!

கல்வி கற்பதில் முஸ்லிம்கள் ஆரம்பம் முதலே ஆர்வம் காட்டாத நிலை. மனித அறிவின் பிறப்பிடம் கல்வி என்பதை ஏனோ முஸ்லிம்கள் மறந்துவிட்டார்கள். எழுத்தறிவில் மிகவும் பின்தங்கிய சமுதாய மக்களாக முஸ்லிம்கள் இருக்கின்றார்கள். இவ்வாறு இருக்கையில் கற்றறிந்த மாற்றார்கள் முஸ்லிம் சமுதாயத்தை ஊடகங்களின் வாயிலாக நசுக்குகிறார்கள். ஊடகங்களை எதிர்கொள்ள முஸ்லிம் சமுதாயத்தை கல்வியில் முன்னேற்றமடையச் செய்யவேண்டும்.

*அடுத்த இதழில்.., இறைநாடின்..!*



VASANTHAM - December 2012.indd 7 12/30/12 10:00:03 AM

# “விபரீதங்கள் குறித்த எச்சரிக்கை உணர்வுகள் இல்லை..!”



ஆசிரியருடனான பேராசிரியரின் பேட்டி தொடர்கின்றது..!

● இன்றைய ஊடகங்களின் நிலை,தொடருங்களேன்..!

American Associations of paedeatricians-அமெரிக்க குழந்தைகள்நல மருத்துவர்கள் கழகம் எனும் ஒரு அமைப்பு ஒரு ஆராய்ச்சி செய்து வெளியிட்டிருக்கின்றது. அதில் கூறப்பட்டிருக்கின்றபடி, தனது கரு-வறையில் குழந்தையை சுமக்கும் ஒரு தாய், பார்க்கும் தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் தாக்கம் அந்த குழந்தையையும் பாதிக்கும் என்று சொல்கின்றனர் மருத்துவர்கள்.மேலும், ஏழு வயது வரை குழந்தைக்கு தொலைக்காட்சியைக் காட்டக்கூடாது என்று சொல்கின்றார்கள்.இந்த ஆய்வறிக்கை எத்துணை பாராதூரமானதாக இருக்கின்றது என்று நீங்கள் கருதக்கூடும்.

● இதற்கு என்ன தலையாய காரணம்..??

சமீபத்தில் ஸவூதி அரேபியாவில் 3 வயது சிறுவன் ஒருவன், தனது தந்தை வீடியோ கேம்ஸ் வாங்கி வராத காரணத்தால், அவருடைய துப்பாக்கியை எடுத்து அவரையே சுட்டுக் கொன்றிருக்கின்றான் என்பதை சில நாட்களுக்கு முன்னர் படித்திருப்பீர்கள்.இந்த துணிச்சலை அந்த மழலை எங்கிருந்து பெற்றிருக்கும்..? நிச்சயமாக, தொலைக்காட்சி அல்லது இணைய வழிகளில்தானே..!

வரும் விபரீதங்கள் பற்றிய எச்சரிக்கை உணர்வுகள் இல்லாமல் நமது சமுதாயம் இருப்பதையும், அதைப் பற்றி அதிகமாக வருத்தப்படாத சமூக அமைப்புக்கள் இருப்பதும் நிச்சயமாக வருந்தத்தக்கது.

● ஊடகத்துறையில், இஸ்லாமிய மாற்று ஊடகத்துறை குறித்து தங்களின் கருத்து என்ன..?

தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக விரைவாக வளரும் மற்றும் தாக்கங்களை விரைந்து செயற்படுத்தும் மிக முக்கியமானதொரு வினா இது..!முஸ்லிம்களைப் பொறுத்த வரை ஊடகத்தை சரியான முறையில், மிக நல்ல முறையில் பயன்படுத்த வேண்டும்.குறிப்பாக, முஸ்லிம்களுக்கிடையே மட்டுமல்ல, முஸ்லிமல்லாதாரும் இதில் பங்குபெறும் வகையில் நமது ஊடகத்துறையை சீர்திருத்தி அமைக்க வேண்டும் என்பது காலத்தின் கட்டாயமாகிவிட்டது.அதில், உண்மையிலேயே சில முஸ்லிம்கள் சாதனையும் புரிந்திருக்கின்றார்கள்.குறிப்பாக, இணைய உலகில் தமிழ் யுனிகோட் எழுத்துருவை உருவாக்கியது தமிழ்நாட்டின் அதிராம்பட்டினத்தைச் சேர்ந்த உமர் காக்கா அவர்கள்..!

அதேபோன்று, இணையம் மற்றும் அது தொடர்பான அம்சங்களில் மார்க்க மற்றும் சமூக ரீதியான பதிவுகளை முஸ்லிம்கள் ஏராளமாக செய்து வருகின்றார்கள் என்பதில் எந்த ஐயமும் கிடையாது. ஆனால், அதேவேளை..,

பேராசிரியரின் எண்ணங்கள்..,
அடுத்த இதழில்.., இறைநாடின்..!



VASANTHAM - December 2012.indd 8 12/30/12 10:00:04 AM



# பிள்ளைகளுக்காக பிடிப்புடன்..!

**மனஸ்தாபங்கள் உண்டு பெற்றோர் மத்தியில் ஆயிரம்..! பிள்ளைகளுக்காக கருதுங்கள் தங்கள் இல்வாழ்வை சுகமான பாரம்.!!**

பெற்றோர் சண்டையிடும்போது குழந்தைகள் முதலில் பயப்படுகின்றன. அவர்களுடைய ஆழ் மனதில் பாதுகாப்பற்ற உணர்வு எழுகிறது.இதனால் தான் பல குழந்தைகள் சண்டையின் போது அழுகின்றன. ஏதேதோ கத்துகின்றன. சத்தம் போடுகின்றன.இதனால் குழந்தைக்கு ஏற்படும் மன அழுத்தம் கொஞ்ச நஞ்சமல்ல.அதிலும் சண்டையில் பெற்றோரின் கோபம் குழந்தைகளின் மீது திரும்பி விட்டால் போச்சு. குழந்தைகள் கதிகலங்கி விடுகின்றன.

குழந்தைகள் இதனால் பல தவறான பாடங்களைக் கற்கிறது. அப்பாவிடம் நல்ல பெயர் வாங்க அம்மாவைத் திட்டினால் போதும் என நினைக்கிறது. இதனால் அப்பாவைப் பற்றி அம்மாவிடமும், அம்மாவைப் பற்றி அப்பாவிடமும் கதைகள் ஒப்பிக்கிறது. அவர்களுடைய நோக்கம் அம்மாவுக்கும், அப்பாவுக்கும் சண்டை மூட்டுவதல்ல.

பெற்றோரின் அரவணைப்பு சாதாரணமாய் கிடைக்காத போது ஏதேதோ செய்து அதை அடைய முயல்கின்றன.

பெற்றோரின் சண்டையில் குழந்தைகளை இழுக்கவே கூடாது. பல பெற்றோர் தங்கள் குடுமிப்பிடி சண்டையில் குழந்தையை நடுவராக்க முயல்வார்கள். இது குழந்தைகளின் மன அழுத்தத்தை ரொம்பவே அதிகரிக்கும். பெற்றோரிடம் பாகுபாடு காட்டாத சூழலை குழந்தைகளுக்குத் தர வேண்டும். அதை விடுத்து குழந்தைகளையே இக்கட்டான சூழலில் தள்ளி விடக் கூடாது.

பெற்றோரின் சண்டை குழந்தைகளை உளவியல் ரீதியாகவும் பாதிக்கும் என்கிறார் அமெரிக்காவின் டாக்டர். மார்க் கம்மிங்ஸ். விவாதங்கள் முற்றுப் பெறாமல் போவது தான் குழந்தைகளை பாதிக்கிறது. தீர்வற்ற சண்டைகள் அவர்களை மன அழுத்தத்தில் தள்ளுகின்றன என்கிறார் அவர்.

மனம் சார்ந்த சிக்கல்களைத் தொடர்ந்து,தலைவலி, வயிற்று வலி என உடல் சார்ந்த நோய்களும் குழந்தைகளை வந்தடைகின்றன.

தம்பதியரின் அன்யோன்யம் குழந்தை வளர்ச்சியின் அஸ்திவாரம் என்கிறார் கனடாவின் குழந்தைகள் நல நிபுணர் கேரி டைரன்பில்.

தங்கள் சண்டையில் சிதைந்து போவது தனது செல்லக் குழந்தை எனும் உண்மையை பெற்றோர் உணர வேண்டும். "தான் செய்வதெல்லாம் சரி" யென நிறுவுவதும், அடுத்தவரை தரக்குறைவாய் பேசுவதும், அவமானப்படுத்துவதும், அடிப்பதும் கடைசியில் குழந்தையைத்தான் பாதிக்கிறது.

ஒருவேளை திருமணங்கள் விவாக விலக்கில் முடிந்து விட்டால் சொல்லவே வேண்டாம். குழந்தை நொறுங்கி விடுகிறது. பெற்றோர் குழந்தையை வளர்க்க பொருளாதாரம் இருக்கிறதா என்று தான் பார்ப்பார்கள். குழந்தையின் ஏக்கமும் தவிப்பும் அவர்களுக்கு பல நேரங்களில் தெரிவதே இல்லை.

**தங்கள் சண்டையில் சிதைந்து போவது தனது செல்லக் குழந்தை எனும் உண்மையை பெற்றோர் உணர வேண்டும்.**

கருத்து வேறுபாடுகள் இல்லாமல் குடும்ப வாழ்க்கை இருக்கப் போவதில்லை. ஆனால் அதை எப்படிக் கையாள்கிறோம் என்பதில் தான் இருக்கிறது வாழ்வின் வெற்றியும் தோல்வியும்..! சண்டையே போடாமல் இருக்க முடியாது.அதுவும் ஆபத்தானதே. அடக்கி வைக்கப்படும் கோபம் நோய்களாகத் தலை நீட்டும். ஆனால் சண்டையைத் திறமையாகக் கையாளவேண்டும்.

கருத்து வேறுபாடு வந்தால் எப்படி நடந்து கொள்ள வேண்டும் என குழந்தைக்குக் கற்றுக் கொடுப்பதாய் இருக்க வேண்டும் உங்கள் நடவடிக்கை !முடிவில்லாமல் ஒரு சண்டை இருக்கவே கூடாது. விவாதித்து, பேசி, கடைசியில் உடன்பாடாகி சந்தோசமாய் ஒரு விவாதம் முடிவுக்கு வரவேண்டும். அது உண்மையில் குழந்தைக்கு வழிகாட்டும் என்கிறார் உளவியலார் பிராட் சாச் (Brad Sachs). இந்த உண்மையைத் தம்பதியர் புரிந்து கொண்டால் வாழ்வில் சிக்கலே இல்லை.

**மங்கஃப்**



IPC- இஸ்லாமிய நிலையம், மங்கஃப் ஆடவர் கிளையில் நடைபெற்ற கவுரவ நிகழ்ச்சி ஒன்றில், புதிதாக இஸ்லாத்தில் இணைந்த தமிழ சகோததரர் ஒருவருக்கு நினைவுப் பரிசு வழங்குகின்றார், மங்கஃப் கிளை மேலாளர் வழக்குரைஞர் அஷ்ஷெய்க் முனீஃப் அல்-ஆஸ்மி அவர்கள். அருகில், மங்கஃப் கிளை, தமிழ்ப் பிரிவின் சகோதரர் முஹம்மத் ஹுஸைன் மற்றும் சகோதரரகள்..!





IPC-இஸ்லாமிய நிலையம், மகளிர் தலைமை கிளை, ரவ்தா-வில் நடைபெற்ற சிறப்பு வகுப்பு ஒன்றில் உரையாற்றுகின்றார், மகளிர் தலைமை கிளை பொறுப்பாளர்..!

**ரவ்தா**





சிறப்பு வகுப்புக்களில் பயிலும் புதிதாக இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவிய தமிழ் சகோதரிகள் உள்ளிட்ட பிறமொழி சகோதரிகள்..!





தியாகத் திருநாளை ஒட்டி, இஸ்லாமிய நிலையத்தில் நடைபெற்ற புதிதாக இஸ்லாத்தின்பால் திண்மைத் தழுவியோர் மற்றும் தேவையுடைய எளியோருக்கு குர்பானீ- இறைச்சி பங்கீடு!

**கேதான்**



VASANTHAM - December 2012.indd 10 12/30/12 10:00:15 AM

# பதின்பருவ பிள்ளைகளால் அவஸ்தையா..?



**பலவித குழப்பங்களைக் கொண்டது,பதின் பருவம்! குழந்தைகளின் உடல் தோற்றத்தில் ஏற்படும் மாற்றங்களினால், கோபத்திற்கும், எரிச்சலுக்கும் அர்த்தம் புரியாமல் பெற்றோர்களைத் தவிக்கவிடும் இளம்பருவம்..!அதுவும் பெண் குழந்தைகளின் வாழ்வில் ஏற்படும் முக்கிய காலகட்டத்தின் வளர்ச்சித் தூண்பருவம்..!**

டீன் ஏஜ்-பதின்பருவ காலக் கட்டத்தில் பெண் குழந்தைகள் வேகமாக வளர்கின்றனர் இவ்வளர்ச்சி உடல், அறிவு மற்றும் உணர்வு ரீதியானது.

இந்த வயதில் பெண் பெரியவள் ஆகிவிடுகிறாள்.எந்தப் பெண் குழந்தையும் சிறிய வயதில் அப்பா செல்லமாக இருப்பார்கள். இந்த பாசவலையில் பழகிப்போன அப்பா, திடீ-ரென டீன் ஏஜ்-இல் மகள் தன்னைவிட்டு விலகத் தொடங்குவதை எளிதாக எடுத்துக்கொள்ள முடியாதுதான்.

தாய் - மகள் முறை என்பது அப்பா - மகள் உறவு முறையிலிருந்து மிகவும் மாறுபட்டது. தாயுடன் ஒட்டுதலாக இருக்கும் மகள் தன்னிடம் விலகி இருக்கிறாளே என்ற ஆதங்கம் எந்த ஒரு தகப்பனுக்கும் ஏற்படத்தான் செய்யும். இந்த சூழ்நிலையில் குடும்பத்தை தன் கட்டுப்பாட்டில் வைத்திருக்க முனையும் அப்பாவுக்கும் தன் போக்கில் இருக்க நாடும், மகளுக்கும் இடையில் நடக்கின்ற நிகழ்வுகளின் விளைவுகள் நிச்சயம் குடும்பத்தையும் கலங்கடித்துவிடத்தான் செய்யும்.

டீன் ஏஜ்-இல் இருக்கும் மகள் அம்மாவைத் தவிர ஏறக்குறைய எல்லா உறவுமுறையினரிடமிருந்தும் தனித்து இருக்கவே விரும்புவாள். அதை அப்பா என்பவர் புரிந்து கொள்ள வேண்டும். அதை விடுத்து அறிவுரைகள், சொல்வதும், அதை செய்,இதை செய்யாதே என அதிகாரம் செய்யும் போதும் அது அவர்களின் மனதை, தன்னம்பிக்கையை, அவர்களுக்குண்டான ஆளுமையை தகர்க்கின்றன. எனவே பதின் பருவ காலக்கட்டத்தில் உங்கள் மகளுக்காக சில விஷயங்களை விட்டுத்தான் கொடுக்க வேண்டியிருக்கும். தந்தையர் தங்களின் அணுகு முறையை மாற்றித்தான் கொள்ள வேண்டும்.

பதின் பருவத்தில் பெண்கள் தன்னுடைய அந்தரங்க விஷயங்களை கட்டிக் காப்பவளாகவும், அதை வெளியில் சொல்ல விரும்பாதவர்களாகவும் இருப்பார்கள். உடல் வளர்ச்சி மாற்றம், மனதில் எழும் மனவெழுச்சிகளுக்கு அர்த்தம் புரியாமல் இத்தகைய நிலையில் இதை வெளிப்படுத்தாமல் இருக்க, தனிமையை தேடுவாள். அப்பாவிடம் விலகி இருப்பதையே விரும்புவாள். அதே சமயம் அப்பாவின் பாசத்திற்காகவும் ஏங்கிக் கொண்டிருப்பாள்.மகளின் குழப்பங்களையும், சந்தேகங்களையும், மனபோராட்டங்களையும் புரிந்துகொள்ள வேண்டும். உடலிலும் மனதிலும் எழும் மாற்றங்கள் குறித்து அவளுக்கு நல்ல தோழமையோடு இருந்து அறிவுறுத்தல் வேண்டும்.

> **எந்தப் பெண் குழந்தையும் சிறிய வயதில் அப்பா செல்லமாக இருப்பார்கள்.**

துப்பறிவதை விடுங்கள். அதற்குப் பதிலாக, நல்லது, கெட்டதுகளை அன்புடன் பக்குவமாக எடுத்துச் சொல்ல வேண்டும். அவர்களின் நடவடிக்கையில் கவனம் செலுத்துவதை விட்டு விட்டு, அதே சமயம் அவர்களின் நடவடிக்கைகளில் மேற்பார்வையிட்டு, எந்த விஷயத்தையும் எதிர்க்கொள்ள வேண்டிய மன பக்குவத்தை அவர்களுக்குத் தேவைப்படும் போது தந்து, வழிகாட்டுதலோடு இருந்தால், மகள் அப்பா உறவுமுறை குழப்பத்தை ஏற்படுத்தாது. அச்சத்தை உருவாக்காது.

குழந்தைகளுக்கும் பெற் றோர்களுக்குமான தலைமுறை இடை-வெளியை மேலும் நீட்டிவிடும் வேலை-லயை இன்றைய அவசர உலகமும், மேற்கத்திய பழக்கங்களும்,அதிவேக தகவல் தொழில் நுட்பங்களும் கச்சிதமாக செய்து வருகின்றன.இந்த சூழலில் டீன்ஏஜ் பருவத்தில் இருக்கும் பிள்ளைகளுக்குப் பெற்றோர்கள் சில சமயங்களில் பிடிக்காதவர்களாகி விடுகின்றனர்.எனவே, அப்பாக்கள் குடும்பத்தில் தங்களின் ஆளுமையை வெளிப்படுத்தும் செயலை மிக புத்திசாலித்தனமாக கையாள வேண்டும்.

பதின் பருவத்தில் முக்கிய மான மாற்றம் மொட்டு விடும் பாலியல் உணர்வு. இந்த இனம் புரியாத உணர்வை அவர்கள் முழுவதும் புரிந்து கொள்ள முடியாமல் தடுமாறுவார்கள். இதை கூர்ந்து கவனிக்கும் அப்பாக்கள் சட்டென்று அறிவுரைகளை அள்ளிவிடத்தான் நினைப்பார்கள்.

இந்த சூழ்நிலையில் அப்பா என்பவர் மகளுக்கு ரொம்ப அனுசரணையாக நடந்து கொள்ள வேண்டும். அவர்களின் உணர்வுகளுக்கு மதிப்பளிக்க வேண்டும். அனைத்திற்கும் ஒரு பொது வரையறைகளை வைத்துக் கொண்டு, பதின் பருவ மகளிடம் அன்பாக நடந்து கொண்டால் எந்த அப்பாவுக்கும் பெண்ணைப் பிடிக்கும். எல்லாப் பெண்களுக்கும் அப்பாவையும் பிடிக்கும். ■



VASANTHAM - December 2012.indd 11 12/30/12 10:00:22 AM

● சிறுகதை | சுவனப்ரியன்

# மாமியாரா..? மருமகளா..??

**உறவுகள் தொடர்கதைகள்..! பிரிவுகள் சிறுகதைகள்.!! தொடர்கதைகள் தொடரும் கதைகள்..! சிறுகதைகள் முடிந்தே ஆக வேண்டிய பக்கக் கதைகள்..! இதுதான் வாழக்கை நமக்குக் கற்றுத் தரும் கட்டாயப் பாடங்கள்.!!**

ஓரளவு வசதியான வீடுதான்..! ரஹீம்,அவன் மனைவி ஆயிஷா மற்றும் அவனது வயதான தாய் மர்யம்!இந்த மூன்று பேரையும் சேர்த்து ஆயிஷ ாவின் வயிற்றில் வளரும் ஆறு மாத குழந்தை. இந்த நான்கு பேர் வசதியாக வாழ இந்த வீடு போதும்தான்.

ரஹீமுக்கு திருமண மாகி 6 வருடங்கள் ஆகி விட்டது. இந்த வருடம்தான் அவனது மனைவி உண்டாகி இருப்பது அவனுள் மிகுந்த மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. ஒரு புறம் மகிழ்ச்சி.,!மறுபுறம் அவனது தாயார் ஒரு வாரம் முன்பு வாத நோயால் பாதிக்கப்பட்டு ஒரு கால் ஒரு கை விளங்காமல் போன சோகம். டாக்டரும் கையை விரித்து விட்டார்.இனி படுக்கையில் தான் தனது வாழ்நாளை தனது தாயார் கழிக்க வேண்டுமாம். சிந்தனை வயப்பட்டவனாக தனது மளிகை கடையை திறக்க ரஹீம் சென்று கொண்டிருந்தான்.

ஆயிஷா தனது மாமியாருக்கு மருந்துகளை கலக்கி கொடுத்துக் கொண்டிருந்தாள். இரண்டு நாட்களாகி விட்டது. மாமியாரின் துணிகளையும் மாற்றியாக வேண்டும். தனது கணவன் வருவதற்குள் மதிய உண-வையும் தயார் பண்ண வேண்டும்: என்று எண்ணியபடியே வேலைகளில் மும்முரமானாள் ஆயிஷா.

"ஆயிஷா..கொஞ்சம் இங்கே வாம்மா..'!"

மாமியாரின் குரல் கேட்டு அடுப்பங்கரையிலிருந்து ஹாலுக்கு வந்தாள் ஆயிஷா.

ஆயிஷாவின் முகத்தை பார்ப்பதற்கே வெட்கப்பட்டுக் கொண்டு தனது முகத்தை திருப்பிக் கொண்டார் மர்யம்.

நிலைமையை புரிந்து கொண்ட ஆயிஷா மாமியாரின் உடை-களை மாற்ற ஆயத்தமானாள்.

ஆம்..! படுக்கையையே கழிவறையாக்கிய மாமியாரை பரிதா-பமாக பார்த்துக் கொண்டே அவரை தூக்கி சுவற்றோடு சாய வைத்தாள். உடுத்திய துணிகள், விரிப்பு அனைத் தையும் ஒன்றுவிடாமல் எடுத்து துவைக்க போட்டாள் ஆயிஷா..!

தனது மருமகள் தனக்காக செய்யும் அனைத்து வேலைகளையும் நோட்டம் விட்டுக் கொண்டே இருந்தார் மர்யம்..!

வாளியில் உள்ள தண்ணீரில் டவலை நனைத்து தனது மாமியாரின் உடல் முழுக்க துடைத்து விட்டாள் ஆயிஷா.துவட்டி முடிந்தவுடன் புதிய துணிகளை எடுத்து மர்யமுக்கு அணிவிக்கும் பொழுது மர்யமின் கண்களிலிருந்து கண்ணீர் பொல பொலவென்று கொட்ட ஆரம்பித்தது.

அப்பொழுதுதான் இதை கவனித்த ஆயிஷா "என்ன மாமி... ஏன் அழுறீங்க...? உடல் ஏதும் வலிக்கிறதா?" என்று கேட்டாள்.

"இது உடல் வலி இல்லம்மா..!மனசு வலி...!!நான் முன்பு உங்க குடும்பத்துக்கு செய்த கொ-டுமைகளை நினைத்து பார்த்தேன். அழுகை வந்து விட்டது'..!"

"அட....அது எப்பவோ நடந்த கதை..அதற்கென்ன இப்போ..? கவலைப்படாமல் தூங்குங்க..!"

"இல்லம்மா...உன் கல்யாண நேரத்துல நான் கேட்ட 20 பவுன் வரதட்சணையினால தானே உன் வீட்டை உன் அப்பா விற்கும் நிலைக்கு ஆளானது. அந்த கவலையிலேயே உன் அப்பாவும் ஒரு வருடம் முன்பு இறந்துபோனாரே.!அதற்கெல்லாம் காரணம் நான்தானேம்மா..!"

"அப்படீன்னு நான் நினைக்கல்ல மாமி...! இறைவன் என் அப்பாவை அழைக்கும் நேரத்தில் அழைத்துக் கொண்டான்.





**இறைவன் தனக்கு செய்த பாவங்களையாவது மன்னித்து விடுவதாகவும் மனிதர்களுக்கு செய்த பாவத்தை அந்தமனிதன் மன்னிக்காத வரையில் நான் மன்னிக்க மாட்டேன் என்று இறைவன் கூறுவதை நீ படிக்கவில்லையா., என்ன..?**

*நான் உங்களை குறை சொல்லவில்லை..!”*

*“அது உன் பெருந்தன்மையை காட்டுதும்மா!என் மகனும் வரதட்சணை வாங்காதேன்னு பல தடவை படிச்சு படிச்சு சொன்னான். இந்த பாவி மனுஷி யார் பேச்சையும் கேட்காமல் பெட்ரூம் செட், 20 பவுன் நகை, விருந்து செலவு என்று ஏகத்துக்கும் உங்க அப்பாவை கொடுமை படுத்திட்டேம்மா..! அவர் இப்போ உயிரோட இல்லே..!அதனால நான் உன்கிட்டே மன்னிப்பு கேட்டுக்கறேன் ஆயிஷா, என்னை மன்னிப்பாயா..?.."*

*மர்யமின்குரல் சன்னமாகி விம்மத் தொடங்கினார்.*

*"என்ன மாமி! சின்ன பிள்ளை மாதிரி அழுகிறீங்க...இப்போ இருக்கிற நிலைமையிலே நீங்க டென்ஷன் ஆனா அது உங்க உடம்பை மேலும் பாதிக்கும். பேசாம தூங்குங்க.,!”*

*“எப்படிம்மா தூக்கம் வரும்..? இறைவன் தனக்கு செய்த பாவங்களையாவது மன்னித்து விடுவதாகவும் மனிதர்களுக்கு செய்த பாவத்தை அந்தமனிதன் மன்னிக்காத வரையில் நான் மன்னிக்க மாட்டேன் என்று இறைவன் கூறுவதை நீ படிக்கவில்லையா., என்ன..? எனக்கோ இறப்பு நெருங்கிக் கொண்டு வருகிறது. என் மனது அமைதியின்றி தவிக்கிறது. மன்னிக்க வேண்டிய உன் தகப்பனாரும் உயி-ரோடு இல்லை..! நான் என்ன செய்வேன் இறைவா..? நான் என்ன செய்வேன் இறைவா...??” என்று முனகிக் கொண்டே மர்யம் தூங்கிப் போனார்.*

*தனது மாமியாரை பரிதா பத்தோடு பார்க்கத் தொடங்கினாள் ஆயிஷா..!பழைய நினைவுகள் எல்லாம் கண் முன் நிழலாடியது..!*

*திருமணத்தில் தனது மாமியார் ஆடிய ஆட்டமும்,தனது தகப்பனாரிடம் திருமண நாளன்று பேசிய தொகைக்கு அதிகமாகவே வரதட்சணை கேட்டு கொடுமை படுத்தியதும் வேறு வழி இன்றி வட்டிக்கு பணத்தை வாங்கி திருமணத்தை முடித்ததும் ஒரு கணம் நினைத்துப் பார்த்தாள் ஆயிஷா!*

*வாங்கிய கடனுக்கு வட்டி கட்ட முடியாமல் இருந்த வீட்டையும் விற்று வாடகை வீட்டில் சில காலம் வசித்து வந்ததையும் சொந்த வீடு போன ஏக்கத்தில் சில நாட்களுக்குப் பிறகு மாரடைப்பு வந்து இறந்த செய்தியும் நினைவுக்கு வரவே ஆயிஷாவின் கண்களிலிருந்து கண்ணீர் உருண்டு வழிந்தோடி தரையை தொட்டது.,!*

*எனது மாமியார் ஏன் இப்படி நடந்து கொண்டார்?*

*இவர்களிடம் சொத்து இல்லையா? சாப்பாட்டுக்கு சிரமப்பட்டவர்களா? எதுவும் இல்லை.இறைவன் கொடுத்த வசதியான வீடு. தினமும் பல ஆயிரங்களை கொட்டிக் கொடுக்கும் மளிகைக்கடை. ஒரே ஆண் வாரிசு..!பரம்பரை சொத்து,,!இவ்வளவு இருந்தும் பாழாய்ப் போன இந்த வரதட்சணையை அவசியம் கேட்டுத்தான் இருக்க வேண்டுமா!*

*அதுவும் கல்யாண நேரத்தில் ஈவு இரக்கமின்றி அப்படி பேசி எனது தகப்பனாரிடம் இருந்து அந்த பணத்தை வாங்கத்தான் வேண்டுமா...?*

*இன்று அந்த பணம் எங்கே!..?*

*கழிவறைக்கு போகக் கூட முடியாமல் தினம் செத்து பிழைக்கிறார்களே!*

*இவர்கள் படும் கஷ்டம் என் மாமியார் சொன்னது போல் எனது தகப்பனார் வயிறெரிந்து கேட்ட பிரார்த்தனைகளோ..?*

*அப்படி இருந்தால் இறைவா! தற்போது எனது மாமியார் தவறை உணர்ந்து விட்டார். என் பொருட்டும் என் தகப்பனாரின் பொருட்டும் எனது மாமியாரை பிழை பொறுத்தருள்வாயாக! என்று மனதுக்குள் கூறிக் கொண்டு மதிய-லுஹர் தொழுகைக்காக சென்றாள் ஆயிஷா.!*



VASANTHAM - December 2012.indd 13 12/30/12 10:00:22 AM

● நினைவு| நூல்




# மறக்க முடியுமா..?



**நேற்று - இன்று - நாளை எனும் தலைப்பில் கட்டுரையாளர் சுனீத் சோப்ரா அவர்கள் பாபரி மஸ்ஜித் ஷஹீதாக்கப்பட்டு பத்தாம் ஆண்டு நினைவு தினத்தில் (குஜராத் கலவரங்களுக்குப் பின்னர்) எழுதிய கட்டுரையிலிருந்து சில வரிகளை இங்கே உங்களுக்கு தருகின்றோம்.!** நன்றி:க.திருநாவுக்கரசு

எப்படியிருந்தாலும், அது ஒன்றும் திடீரென்று நிகழ்ந்து விட்ட வெறிச்செயல் அல்ல! மொத்த நடவடிக்கைகளுமே சங்கப் பரிவார மேல்நிலைத் தலைவர்களால் திட்டமிடப்பட்டதுதான். அத்வானியின் தலைமையில் திட்டமிடப்பட்டது. அத்வானியின் இரத யாத்திரை மிகவும் துல்லியமாகத் திட்டமிடப்பட்டு, செயல்படுத்தப்பட்டது. எதுவுமே, விடுபட்டுப் போவதற்கு வாய்ப்பில்லை.

மேலும், மும்பைக் கலவரங்கள் மீது விசாரணை நடத்திய கிருஷ்ணா கமிஷன் அறிக்கையை ஆராய்வதாக இருந்தால்,டிஸம்பர் 6-இல் சங்கப் பரிவாரங்கள் நடத்தியதைவிட சக்கி வாய்ந்த தாக்குதல்களைத் தொடுக்க தனது சமூக,அரசியல்,நிர்வாக இயந்திரங்களைப் பயன்படுத்திக் கொண்டதும், அது சாதாரண கலவரக் கும்பலின் திடீர் நடவடிக்கை அல்ல என்பதும் புலனாகும்.அது தொடர்ந்து நடைபெற்று வரும் சட்ட விரோதக் குற்ற நடவடிக்கைகளின் ஒரு பகுதிதான் 1992, டிஸம்பர் 6!

நாட்டு விடுதலையின்போது ஆர்.எஸ்.எஸ். நடத்திய மதக்கலவரங்கள்,மதவெறியன் நாதூ ராம் கோட்ஸேயால் மகாத்மா காந்தி படுகொலை செய்யப்பட்டது.,பாபர் மசூதி இடிப்பு,மும்பைக் கலவரங்கள்,குஜராத் கலவரங்கள் மற்றும் உ.பி., குஜராத் போன்ற பா.ஜ.க. ஆளும் மாநிலங்களில் ஏதோ ஒரு காரணம் காட்டி ஜனநாயகம் நசுக்கப்பட்டு வருவது என இவை யாவுமே ஒரே நோயின் பல்வேறு அறிகுறிகள்.

ஆனால், இந்தியா ஒரு சுதந்தர,மதச்சார்பற்ற,ஜனநாயக நாடாக நீடிக்க வேண்டுமென்றால் இந்நோயின் அறிகுறிகள் வேரோடு அகற்றப்பட வேண்டும்.

“ வகுப்புவாத ஆபத்துக்கு எதிராக மக்களை ஒன்று திரட்டும் கண்ணோட்டத்தில் இருந்து இந்நாளின் முக்கியத்தைக் குறைத்து மதிப்பிட முடியாது.


**ஹர்கிஷன்சிங் சுர்ஜித்**
மறைந்த முன்னாள் மார்க்சிஸ்ட் தலைவர்

அயோத்தி வன்முறைகள் அபாய எச்சரிக்கை செய்ததை, குஜராத் மதக் கலவரங்கள் தெளிவாக, சந்தேகத்திற்கிடமின்றி, பாசிசம் வந்துவிட்டது என்பதைத் தெள்ளத் தெளிவாக்கிவிட்டது.

**கே.என். பணிக்கர்**
கட்டுரையாளர்

சங்கப் பரிவாரங்கள் தமது தேவைக்கேற்ப வரலாற்றைத் திருத்த விரும்புகின்றது என்பதற்கு பாபரி மஸ்ஜித் ஓர் உதாரணம்.

**இர்ஃபான் ஹபீப்**
சிறப்புப் பக்க கட்டுரையாளர் ”









VASANTHAM - December 2012.indd 14 12/30/12 10:00:24 AM

# “ஆண்டவன்” இல்லை!



நீரென்றும்
நிலமென்றும்
நிமிர்ந்து எரியும் நெருப்பென்றும்

கடலென்றும்காற்றென்றும்
கறுத்து வெளுக்கும்
கார்மேகமென்றும்

மழையென்றும் மலையென்றும்
மண்ணில் விளையும்
பயிரென்றும்

எறும்பென்றும்
பறவையென்றும்
எங்கும் தெரியும் வானமென்றும்

பொன்னென்றும்
பொருளென்றும்
பூமியில் பூக்கும் பூவென்றும்

காடென்றும்மேடென்றும்
கண்ணில் காணும்
காட்சியென்றும்

உயிரென்றும்
உடலென்றும்
ஊர்ந்து ஓடும் உதிரமென்றும்

அழுகையென்றும்
சிரிப்பென்றும்
ஆழ்ந்து உணரும் அறிவென்றும்

உலகநாள் துவக்கத்திலிருந்து
இன்றுவரை இனியும்
இறுதிநாள்வரை

ஒவ்வொன்றின் மீதும் சக்திபெற்று
அணு அணுவாய்
சிந்தித்து செயலாற்றும் அரசனே!

நீ ஆண்டவனில்லை
”ஆள்பவன்”
அகிலத்தை ஆள்பவன்

“இறப்பில்லாதவன்”
எல்லாம் வல்ல
இறைவன்..!



VASANTHAM - December 2012.indd 15 12/30/12 10:00:28 AM

## யூஸுஃ.ப்பும் சகோதரர்களும்..!

**11**

# சிறையிலிருந்து அரண்மனைக்கு..!

எல்மா ரூத் ஹார்டர்
தமிழில் மழலைப்ரியன்

எல்லா விபரங்களையும் அரசரிடம் பணியாள் கூறினான். கனவின் பலன் சொன்னவரை அரசர் சந்திக்க விரும்பினார். உடனே தம்மிடம் யூஸுஃ.பை அழைத்து வரும்படி தம் சார்பாக ஒரு தூதுவரை அனுப்பினார். ஆனால், யூஸுஃ.ப் சிறையிலிருந்து வர மறுத்துவிட்டார். நீங்கள் மன்னரிடம் திரும்பிச் சென்று, ஒரு கேள்வியை முன்வையுங்கள். நான் சிறைக்கு வரக் காரணமானவர்கள், அதைப் பற்றி என்ன எண்ணுகின்றார்கள்? நான் எதற்காக இங்கு அனுப்பப்பட்டேன் என்பது அரசருக்குத் தெரிந்திருக்காவிட்டால் என்ன நடந்தது என்பதை நிச்சயமாக இறைவன் அறிவான்" என்று மன்னரின் தூதுவரிடம் கூறினார் யூஸுஃ.ப்.

இதை அரசரிடம் சென்று அவன் கூறினான். யூஸுஃ.பின் வழக்கு மீண்டும் விசாரணை செய்யப்பட்டது. அவர் குற்றமற்றவர், எந்தத் தவறும் செய்யாதவர் என நிரூபணமானது. "யூஸுஃ.பை என்னிடம் அழைத்து வாருங்கள். இனி, அவர் எனது உதவியாளராக இருப்பார்" என்றார் அரசர்! அரசரிடம் அழைத்து வரப்படார், யூஸுஃ.ப். இறுதியாக கொடுஞ்சிறையிலிருந்து விடுதலையானார்.

அதன் பின்னர்..,

*பின்னர் நடந்தது என்ன..? அடுத்த இதழில் அல்லாஹ் நாடினால்..! அதுவரை உங்கள் பெற்றோரிடம் மேற்சொன்ன சம்பவம் தொடர்பான திருக்குர்ஆன் வசனங்களைப் பற்றி அளவளாவுங்களேன்..!*

## திருக் குர்ஆன்

அத்தியாயம் 106
**குறைஷ்**
மக்காவில் அருளப்பட்டது
வசனங்கள்:4

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ١

لِاِيۡلٰفِ قُرَيۡشٍ ٢

106:1 லீலா.ஃபி குறைஷின்

106:1 குறைஷிகள் நன்கு பழக்கப்பட்டுவிட்டார்கள்.

اٖلٰفِهِمۡ رِحۡلَةَ الشِّتَآءِ وَالصَّيۡفِ ٣

108:5 லீலா.ஃபிஹிம் லிஹ்லதஷ் ஷிதாஇ வஸ்ஸை.ஃப்

106:2 (அதாவது) குளிர்கால மற்றும் கோடைகாலப் பயணங்களில் நன்கு பழக்கப்பட்டு விட்டார்கள்.

فَلۡيَعۡبُدُوۡا رَبَّ هٰذَا الۡبَيۡتِ ٤

106:3 .ஃபல்ய’புது ரப்ப(bba) ஹாஸ(za)ல் பை(b)த்

106:3 எனவே அவர்கள் இந்த இல்லத்தின் அதிபதியை அடிபணிந்து வணங்கட்டும்.

الَّذِىۡۤ اَطۡعَمَهُمۡ مِّنۡ جُوۡعٍ
وَّاٰمَنَهُمۡ مِّنۡ خَوۡفٍ ٥

106:4 அல்லஜீ(zee) அத்அமஹுு ம் மின்ஜுு (ju)இ(d)வ் வஆமனஹுு ம் மின்க(kh)வ்.ஃப்

106:4 அவனோ அவர்களைப் பசியிலிருந்து காப்பாற்றி உண்ணக் கொடுத்தான். மேலும், அச்சத்திலிருந்து அவர்களை மீட்டு அமைதியை வழங்கினான்.



VASANTHAM - December 2012.indd 16 12/30/12 10:00:29 AM



# நான் நோக்கும் என் அழகிய மணாளன்..! 2

**நம்மைச் சுற்றி நடக்கின்ற விஷயங்களைக் கண்ணுறும்போது நம்மை நாமே சுயபரிசோதனை செய்துகொள்வது அவசியம் அல்லவா..?**

பெரும்பாலான முஸ்லிம் வீடுகளில் பெற்றோர் நிலை என்ன? வீட்டிலுள்ள ஆண்கள் நபிவழி பேணி தாடி வைக்கின்றார்களோ இல்லையோ, ஐவேளை இறைஇல்லம் சென்று தொழுகிறார்களோ இல்லையோ, முஸ்லிம் பெண்கள் பெரும்பாலோர் புர்கா எனும் அபாயா-வை அணியக்கூடியவர்களாக இருக்கின்றனர்.தன் மகள் உயர்நிலை அல்லது மேனிலை வகுப்புடன் கல்வியை நிறுத்தச் சொல்லிவிடுவர்.காரணம் கேட்டால், “ஆம்பளைங்க எப்படி போனாலும் பரவாயில்லை, ஆனா பொம்பளை புள்ளைக்கு ஒண்ணுன்னா ஊரு தப்பா பேசும்” என்று தயாராக ஒரு பதில் இருக்கும் வீட்டுப் பெரியவர்களிடமிருந்து..!

ஸுப்ஹானல்லாஹ்! இதுவா இறைக்கட்டளை? நம்முடைய எண்ணங்கள், செயல்கள், வணக்க-வழிபாடுகள் ஆகிய ஒவ்வொன்றும் அல்லாஹ் ஒருவனுக்காக மட்டும்தானே இருக்க வேண்டும்?

ஒரு பெண் தன்னை முழுவதுமாக மறைத்துக் கொண்டுதான் ஆடை அணிய வேண்டும் என்பது எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கட்டளை..!அதற்கு நாம் அடிபணிகிறோம். இதையல்லாது வேறு எந்த காரணம் சொன்னாலும் அது இறைவ-னால் ஏற்றுக்கொள்ளப்படுமா?

**மார்க்கத்தில் பெண், ஆணுக்கு அடிமையில்லை! பெண்ணுக்கு அடிமையில்லை!**

பெண்கள் கட்டுக்கோப்பாக இருக்க வேண்டும் என்று கட்டளை போடும் ஆண்கள், தங்களுடைய ஒழுக்கத்தைப் பேணு-வதில் எந்த அளவு கவனமாக இருக்கின்றார்கள்..?

அவர்களின் பார்வைகளில் தவறிருந்து அதை சுட்டிக்காட்டினால் உடனே "ஆமா, அவ ட்ரெஸ் பண்ணினா, நாங்க அப்படித்தான் பார்ப்போம்” என்று ஒரு பதில் வரும். பெண்களை மட்டும்தான் புர்கா போட சொல்லியிருக்கானா அல்லாஹ்? ஆண்களுக்கு எந்த கட்டுப்பாடும் இல்லையா? (பார்க்க:திருக் குர்ஆன் 24:30)

இதைவிட பெரிய விஷயம்,பெண்களை எப்பவும் வீண் விரயம் செய்பவர்கள் என்று குறை கூறும் ஆண்கள், உண்மையில் எப்படி இருக்கின்றார்கள்..? க்ரெடிட் கார்ட் இல்லாத இளைஞர்களைக் காண்பது அபூர்வமாகிவிட்டதே..! இது போலத்தான் நம்முடைய சகோதரர்கள் பலர் வங்கிகளிலும் இன்ஷூரன்ஸ் கம்பெனிகளிலும் வட்டி இயைந்த அம்சங்களில் தங்களை இணைத்துக் கொண்டிருப்பதும். ஆனால், இறைவேதம் என்ன கூறுகின்றது? (பார்க்க:திருக்குர்ஆன் 2:275)

இவையனைத்தையும் விட மிகவும் வேதனையான விஷயம் நம்முடைய வீடுகளில் பெரும்பாலான ஆண்கள் தொழுவதற்கு மஸ்ஜிதுக்கே செல்வதில்லை!

சுப்ஹானல்லாஹ்! சகோதரர்களே, நீங்கள் செய்யும் தவறை இனியாவது திருத்திக்கொள்ளுங்கள். நம் சகோதரிகள் பெரும்பாலானோரைப் பொருத்தவரை, பலர் துணிவோடு புர்காவுடனும் நிகாபுடனும் வேலைக்கு செல்வதை பார்க்கிறோம். ஆனால் சகோதரர்கள் பலருக்கு இன்னுமே தாடி வைக்க தயக்கம். கேட்டால், “ஆஃபீஸ்ல ட்ரெஸ் கோட்-பா” என்று சப்பை கட்டுவார்கள்!

உங்கள் மேன்லினெஸ் எனும் ஆணாளுமையை நவீன கேலக்ஸி செல்லிடைப்பேசி வைத்திருப்பதிலும், ஹீரோ ஹோண்டாவை வேகமாக ஓட்டுவதிலும், பீட்டர் இங்கிலாந்து சட்டைகளுடனும் மட்டுமே காட்டாதீர்கள்! நபிவழியை அல்லாஹ் ஒருவனை வணங்குவதற்க்காக மட்டுமே கடைபிடியுங்கள்.உங்களை நீங்களே ஒருமுறை கேட்டுக்கொள்ளுங்கள் நபிவழிபடி தான் நடந்துக்கொள்கிறோமா? அல்லாஹ்வின் கட்டளையை ஏற்று நடந்துக்கொள்கிறோமா என!

முஸ்லிம் ஆண் தன் தோற்றத்திலும்,செயல்கள் ஒவ்வொன்றிலும் நபிவழியை கடைப்பிடித்தால் மட்டுமே அவன் உண்மையான முஸ்லிமாகிறான்.

இதை எனக்கும் ஒரு படிப்பினை யாக்கிக் கொள்கிறேன். அதேபோல் சகோதரிகளுக்கும்..! மார்க்கத்தில் பெண், ஆணுக்கு அடிமையில்லை, ஆண், பெண்ணுக்கு அடிமையில்லை.

ஆனால் அல்லாஹ் இட்ட கட்டளைக்கிணங்க பெண்களாகிய நாம் திருமணத்துக்கு முன் நம் வலீயாகிய தகப்பனாருக்கு பணிந்து நடக்கிறோம். அதுபோல திருமணத்துக்கு பின் நம் கணவருக்கு பணிகிறோம். ஏனெ-னில் அவர்களை அல்லாஹ் நமக்கு பொறுப்பாளர்களாக் கியிருக்கிறான். இதை புரிந்து கொண்டு, நமது வீடுகளிலும், நாம் செய்யும் ஒவ்வொரு செயல்களிலும் அல்லாஹ் ஒருவனுக்காக அன்றி வேறெதற்காகவும் இல்லை எனும் உயரிய எண்ணத்தின்படி நடக்க பழகிக்கொள்ள வேண்டும். அதற்கு இறையருள் என்றும் துணைநிற்கட்டும்..!

முற்றும்



VASANTHAM - December 2012.indd 17 12/30/12 10:00:33 AM



# கர்ப்ப கால பொது நியதிகள்

**தாய்மை இறைமையின் உன்னத அருட்பேறு..!அது மகளிரின் வாழ்வில் வற்றா பரவசம் தரும் ஆறு.!தாய்மைப் பண்புக்கு ஈடு-இணை இல்லை வேறு..!அதன் ஆரம்ப நிலையாம் கர்ப்ப காலத்தில் கவனம் தேவை பாரு..!!**

கர்ப்ப காலத்தில் மகளிர் உடல் ரீதியாக கவனம் செலுத்துவதும் அவசியம். அக்காலங்களில், ஓரளவான உடற்பயிற்சியுடன், நல்ல மனப்பாங்குடனும் இருத்தல் வேண்டும். இவை கருவின் மீது சாதகமான விளைவை உண்டாக்குகின்றன. வேலை செய்வதன் மூலம் நரம்பு மற்றும் இரத்த உற்பத்தி, சுவாசத்தொகுதி ஆகியவற்றின் பணிகள் ஊக்குவிக்கப்பட்டு அவளது வளர்சிதை மாற்றமும் சீரடைகின்றது.

சோர்ந்து போய் படுத்திருத்தல் அல்லது உட்கார்ந்திருத்தல் ஆகியவை உடல் பருமன் அதிகரித்தல், மலச்சிக்கல், தசைகளின் தளர்ச்சி, பிரசவத்தின் போது கருப்பையின் மந்தநிலை ஆகியவற்றை உண்டாக்குகின்றன.

கனமான பொருட்களைத் தூக்குதல், அதிகமாகக் குதித்தல், மிகையான உடற்களைப்பு ஆகியவற்றைக் கருவுற்றிருக்கும் பெண் தவிர்க்க வேண்டும். அத்துடன் அதிகமான தட்பவெப்ப நிலைகள், இரசாயனப் பொருட்களின் விளைவுகளுக்கு உட்படுதல் ஆகியவையும் தவிர்க்கப்படுதல் வேண்டும். இல்லையெனில், கருவிலிருக்கும் சிசு பாதிக்கப்பட நேரிடலாம்.

கால்களினால் தையல் பொறியை இயக்குதல், சைக்கிள் ஓட்டுதல், குதிரைச்சவாரி போன்ற உடலைக் குலுக்கும் பணிகளும், மிகையான பிரயாசையுடன் உள்ள விளையாட்டுக்களும் தவிர்க்கப்பட வேண்டும்.

**“ ஓய்வான நேரங்களில் கர்ப்பிணி சிறிது நேரம் உலாவச் செல்லலாம். இது நீண்ட நேரமாகவோ, அசதியைஉண்டாக்கும் படியாகவோ இருக்கக் கூடாது.**

ஓய்வான நேரங்களில் கர்ப்பிணி சிறிது நேரம் உலாவச் செல்லலாம். இது நீண்ட நேரமாக-வோ, அசதியை உண்டாக்கும் படியாகவோ இருக்கக் கூடாது.

நடந்து செல்லுதல் கர்ப்பிணிகளின் மனோநிலைகளுக்கும், உடற்பணிகளுக்கும் இதமளிக்கின்றது. காற்றோட்டமுள்ள திறந்த வெளிகளில் நீண்ட நேரம் தங்கியிருப்பதானது, கருப்பை உட்சிசுவிற்கு உயிர்வளி (Oxygen) விநியோகத்தை ஊக்குவிக்கின்றது.

கருவுற்றிருக்கும் ஒரு தாய் ஒரு நாளைக்குக் குறைந்தது தினமும் 8 மணி நேரங்களாவது தூங்கவேண்டும். இரவில் நீண்ட நேரம் விழித்திருக்கக் கூடாது. ஏனெனில், கர்ப்பத்தின் ஒழுங்கான வளர்ச்சிக்கு மேற்குறிப்பிடப்பட்ட குறைந்தபட்ச உறக்கம் அவசியமாகின்றது. கர்ப்பிணி தனது வலது பக்கமாகவோ அல்லது மல்லாந்தோ படுத்திருப்பது நல்லது.

கர்ப்பத்தின் முதல் மூன்று மாதங்களிலும் உடலுறவைத் தவிர்த்தல் வேண்டும். ஏனெனில், உடலுறவின் போது ஊக்குவிக்கப்படும் குருதி வினியோகமும், கருப்பையின் கிளர்த்தலில் ஏற்படும் மாற்றங்களும் கருச்சிதைவை உண்டாக்கலாம்.

அதேபோல், கர்ப்பத்தின் கடைசி இரண்டு மாதங்களிலும் உடலுறவு கொள்வதைத் தவிர்த்தல் சிறந்ததாகும். இதன் மூலம் பாலுறுப்புக்களில் கிருமிப்பாதிப்பினால் நோய்த்தாக்கம் (Infection) ஏற்படுவதைத் தவிர்க்கலாம்.

பொதுவாக கர்ப்பகால இறுதியில், கர்ப்பிணியையும், கருப்பை உட்சிசுவையும் பாதிக்கக்கூடிய தொற்று நோய்களில் இருந்து கர்ப்பிணியைப் பாதுகாக்க வேண்டும். ■



VASANTHAM - December 2012.indd 18 12/30/12 10:00:37 AM

# பிரிட்டன் பாராளுமன்றத்தில் பதின்பருவ முஸ்லிம் குரல்.!



இங்கிலாந்தில் இளைஞர்கள் தங்கள் பகுதியில் உள்ள பிரச்னைகள் மற்றும் மக்களின் கருத்துகளை பிரதிபலிக்கும் வகையில் இளைஞர் பாராளுமன்றம் உருவாக்கப்பட்டுள்ளது.

இதற்காக 11 வயது முதல் 18 வயது வரையிலான இளைஞர்கள் ஜனநாயக முறைப்படி தேர்வு செய்யப்பட்டு, பாராளுமன்றத்தில் பேச வாய்ப்பு அளிக்கப்படுகிறது. அந்த வகையில், மேற்கு லண்டனில் உள்ள வோக்கிங்காம் பகுதியில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட சுமையா கரீம் என்ற 16 வயது மாணவி இங்கிலாந்து இளைஞர் பாராளுமன்றத்தில் உரையாற்றியது அனைவரையும் கவனத்தையும் ஈர்த்துள்ளது.

காரணம், தலை மற்றும் கழுத்தை மறைக்கும் வகையிலான இஸ்லாமியர்களின் பாரம்பரிய உடையான ஹிஜாப்பை (பர்தா) அவர் அணிந்திருந்தது தான். இதன்மூலம் பிரிட்டன் நாடாளுமன்ற உறுப்பினர்கள் முன்னிலையில், ஹிஜாப் அணிந்து இளைஞர் பாராளுமன்றத்தில் உரையாற்றிய முதல் நபர் என்ற பெருமையை கரீம் பெற்றுள்ளார்.



## ஊடகங்களின் சுயரூபம்: தோலுரித்த தாலியா..!

எழுத்தாளரும் ஆய்வாளருமான சகோதரி தாலியா முகீத், அமெரிக்க முஸ்லிம்கள் சந்திக்கும் பிரச்னைகளில் அதிபர் ஒபாமாவுக்கு ஆலோசனை வழங்குவார்!எகிப்திய தாயகப் பின்னணி கொண்ட இவர், முஸ்லிம் மக்கள் குறித்த ஆய்வுகளில் புள்ளிஇயல் விவரங்களாக வழங்கும் துறையில் மூத்த ஆய்வாளராக இருப்பவர். அமெரிக்க முஸ்லீமள் சந்திக்கும் பிரச்னைகள் குறித்து அதிபருக்கு ஆலோசனை வழங்கி வரும் இவருடைய ஒரு கருத்து மிகப் பிரபல்யமானது:- வன்முறைகள் குறித்த அம்சங்களை ஊடகங்கள் திரித்துக் கூறிவிடுகின்றன என்பது பரவலான கருத்தே..!ஆனால், முஸ்லிம் சமூகம் தொடர்பான அம்சத்தில் மட்டும் இது மிக அதிகமாகவே நடக்கின்றது"

## யுனஸ்கோ தூதராக சவூதி அரேபியா பெண் விஞ்ஞானி.!!

ஐ.நா சபையின் கல்வி, கலாச்சார, விஞ்ஞான கழகமான யுனெஸ்கோ தனது நல்லெண்ணத் தூதராக சவூதி அரேபிய பெண் விஞ்ஞானி முனைவர். ஹயாத் சிந்தி - யை தேர்வு செய்துள்ளது. இளைய சமுதாயத்தவரிடம் விஞ்ஞான ஆர்வத்தைத் தூண்டி, கண்டுபிடிப்புகளை ஊக்குவித்தவராக டாக்டர் ஹயாத் அறியப்படுகிறார். கல்வியில், குறிப்பாக விஞ்ஞான கல்வி குறித்த விழிப்பு உணர்வை இளைஞர்களிடமும் பெண்களிடமும் ஏற்படுத்துவது இந்தப் பதவியின் நோக்கமாகும்.

இலட்சியங்களை அடைவதில் டாக்டர் ஹயாவின் உறுதியும், நவீன விஞ்ஞான கண்டுபிடிப்புகளின் பக்கம் இளைய சமுதாயத்தை ஈர்த்த அவருடைய பங்களிப்பும் போற்றுதலுக்குரியது" என்று யுனெஸ்கோ தனது செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளது. மத்திய கிழக்கிலும், அதற்கப்பாலும் டாக்டர் ஹயாத் ஆற்றிய விஞ்ஞான சேவைகளுக்கு இஃதோர் அங்கீகாரம்' என்று யுனெஸ்கோ தலைவர் ஐரினா பொகோவா தனது செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

1967ல் மக்காவில் பிறந்த ஹயாத், மருத்துவ வசதியை எட்ட முடியாத நிலையிலிருக்கும் எளியவருக்கும் நோய் பகுப்பாய்வை செய்வதற்கான எளிமையைக் கண்டறிந்தவர்' என்று பாரிஸை தலைமையகமாகக் கொண்ட யுனெஸ்கோ மேலும் கூறியுள்ளது.

'ஒரு விஞ்ஞானியின் பணி என்பது அடையத்தக்க எளிய தீர்வுகளைக் கண்டறிந்து சாதாரண மனிதர்களுக்கு அதைக் கிடைக்கச் செய்வது தான். முஸ்லிம்கள் விஞ்ஞான கண்டுபிடிப்புகளைக் கொண்டு மனித குலத்திற்கு நற்பணி ஆற்றிட வேண்டும்' என்று டாக்டர் ஹயாத் குறிப்பிட்டுள்ளார். இஸ்லாமிய பெண்களின் முக்காடு அணிந்து காணப்பட்ட முனைவர் ஹயா, உயிரி தொழிற்நுட்பத்தில் கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றவர். 'நாம் எங்கு சென்றாலும் நம்முடைய அடையாளங்களை் கலாச்சாரங்களை விட்டுவிடக்கூடாது. அவற்றுக்காகப் பெருமிதம் அடைய வேண்டும். இன்றைய இளம் சமுதாயத்தினரிடையே அறிவியல் விழிப்பு உணர்வு பெருகவும் பணியாற்றுவேன்"என்றார்!






VASANTHAM - December 2012.indd 19 12/30/12 10:00:37 AM

போட்டிப் படிவம் முகநூலிலும் கிடைக்கும்
facebook/vasanthamtamil

# அறிவுப் போட்டி!

கடந்த (நவம்பர் 2012) இதழ் வசந்தம் வாசித்துவிட்டீர்களா?
இனி,பின்வரும் கூற்றுக்கள் மற்றும் கூற்றுக்கு உரியவர்களின் படங்கள் மாற்றித் தரப்பட்டுள்ளன. கூற்றுக்குரிய எண்களை பொருத்தமானவர்களின் படங்களுக்கு அருகில் உள்ள வெற்றிடத்தில் இடுக..!

மொத்தம் 3 பரிசுகள்

1 தாயுமானவன்



2 மறைந்த இஸ்லாமிய பெண் அறிஞர்



3 பெருமானங்களுக்கு முன் பூச்சியமாய்.,!



4 என் கண்கள் சுமந்த கனவுகளெல்லாம்..!



5 "இது" மட்டுந்தான் இல்லாழ்க்கையா..?



## விதிமுறைகள்

1. இப்போட்டி ஆண்-பெண் இருபாலாருக்குமானது 2. ஒருவர் ஒரு படிவத்தை மட்டுமே நிரப்பி அனுப்ப வேண்டும். படிவத்தின் நகலையும் பயன்படுத்திக் கொள்ளலாம்! 3. வசந்தம் மற்றும் IPC குழுமத்தின் ஊழியர்கள் மற்றும் குடும்பத்தினர் இப்போட்டியில் கலந்துகொள்ள அனுமதி இல்லை! 4. பெயர், தொலைபேசி, எண், குவைத்அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு (Passport) எண் குறிப்பிடப்படாத படிவங்கள் நிராகரிக்கப்படும். 5. ஒன்றுக்கு மேற்பட்டவர் சரியான விடை எழுதி இருப்பின் குலுக்கல் முறையில் ஒரு வெற்றியாளர் தேர்ந் தெடுக்கப்படுவார். 6. வெற்றியாளர்கள் ஒருவருக்கு பெறுமதியான பரிசு வழங்கப்படும். 7. போட்டி குறித்து வசந்தம் போட்டிக் குழுவினர் தீர்ப்பே இறுதியானது! 8. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்களை தபால் மூலமாகவோ (முகவரி முதல் பக்கத்தில்) IPC தலைமையகத்திலோ அல்லது கிளைகளிலோ அல்லது 22400057 (Attn: VASANTHAM) எனும் Fax-தொலைநகல் மூலமாகவோ அல்லது vasanthammonthly@yahoo.com எனும் email-மின்னஞ்சல் மூலமாகவோ அல்லது அனுப்பலாம். அல்லது பின்வரும் இடங்களில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் போடலாம். - DANA Textiles -மினா பஜார், மிர்காப்-SEEMATY, IPC அம்காரா கிளை மற்றும் சுலைபியா கிளைகளில் வைக்கப்பட்டுள்ள பெட்டிகளில் சேர்க்கலாம். 9. பூர்த்தி செய்யப்பட்ட படிவங்கள் வந்து சேரவேண்டிய இறுதி தேதி 30. 01. 2012 10. முடிவுகள் வசந்தம் பிப்ரவரி 2013 இதழில் வெளியாகும். இறை நாடின். !

## சுயவிவரம்

பெயர் Name

குவைத் அடையாள அட்டை அல்லது கடவுச்சீட்டு எண்
Civil ID OR Passport No

தொலைபேசி Cell No.

மின்னஞ்சல் email ID

தேசிய இனம்,நாடு
Nationality

குவைத்தில் வசிக்கும் இடம்
Location @ Kuwait



VASANTHAM - December 2012.indd 20 12/30/12 10:00:41 AM




*வாழ்க்கையைப் பற்றிய ஒரு புதிய கண்ணோட்டம்..!அழகிய தருணங்கள்.., ஆழிய அன்பை வெளிப்படுத்தும் உன்னத சாகசங்கள்.!சிறப்பான முறை வாழ்க்கை..!அனைத்து அம்சங்களும் உங்கள் வாழ்வின் உன்னத தாத்பர்யங்களை மிக நேர்த்தியாக்கிக் காட்டும்..!மாற்றங்களின் அனைத்து அம்சங்களையும் என்றும் பொருந்திப் போகும் மாறாத வாழ்க்கை சட்டங்களைக் கொண்டு முன்னெடுத்துச் செல்ல உங்களைத் தயார்படுத்துகின்றது வசந்தம்.சுறுசுறுப்பு,சுவாரஸ்யம் அத்துடன் கொஞ்சம் ஆகுமான குறும்புத்தனமும் நிரம்பியதாய் புதுமையுடன் உங்களைக் கவர்ந்து அணைத்துக் கொண்டு நடைபோடுகின்றது..!*




**வசந்தம்** **உங்கள் இருமை வாழ்வின் முன்னேற்றத்துக்காக எப்போதும் உங்களுடன்..!**

தொடர்புக்கு 97266683 - 97848068 vasanthammonthly@yahoo.com

வாழ்வியல் | குடும்பவியல் | ஒழுக்கம் | வழிபாடு | சமூகம் | ஆளுமை | கல்வி | கவிதை
மழலையர் | ஆய்வு | பேட்டி | இலக்கியம் | நிகழ்வுகள் | உலகம் | தேசம் | போட்டி

**இணையம் மற்றும் சமூக வலைதளங்களிலும்..!**

விருந்தினர்

மழலையர்

ஒழுக்கவியல்

மார்க்கம்

உலகத் தமிழர் அனைவருக்காகவும்...!




சமூகம்

இணையம் குடும்பவியல்

கல்வி போட்டி

உலகத் தமிழர் அனைவருக்காகவும்...!

உலகத் தமிழர் அனைவருக்காகவும்...!

வனிதையர்

உடல்நலன்




**வசந்தம்** உங்கள் இருமை வாழ்வின் முன்னேற்றத்துக்காக எப்போதும் உங்களுடன்..!

சர்வதேசம்

facebook/vasanthamtamil

தொடர்புக்கு
97266683 - 97848068
vasanthammonthly@yahoo.com